1995 ஏப்ரல் 27]

தமிழகத்திலே பயிரிடப்பட்டு வரும் ஒரு வகை பூ தான். இன்றைக்கு ஒட்டு விதைகளாகத்தான் அதைக் கொண்டு வந்து சத்தியமங்கலம் பகுதியிலே பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கிலோ பூவிற்கு *2* ரூபாய் என்று அவர்கள் ஒப்பந்தம் செய்துதான் வாங்குகிறார்கள். சாதாரணமாக நம்முடைய பழக்கத்திலே இருக்கக்கூடிய விதைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தால் விவசாயிகளுக்கு *2* டன் பூ கூட கிடைப்பது அரிது. ஆனால் இன்று ஏ.வி.டி. தாமஸ் போன்ற நிறுவனங்களிலிருந்து வரக் கூடிய அந்த விதைகளிலே உற்பத்தி செய்யும் போது ஒரு ஹெக்டேருக்கு ஏறத்தாழ *7*-லிருந்து *9* டன் வரை கிடைக்கிறது. *90* நாட்களிலே ஏறக்குறைய *14* ஆயிரத்திலிருந்து *18* ஆயிரம் வரை வருமானம் கிடைக்கிறது. எனவே நல்ல வருமானம் கிடைக்கிற காரணத்தாலேதான் அந்த விவசாயிகள் அதைப் பயிடுகிறார்கள். இன்றைக்கு குன்னூர் பகுதியிலே கூட செண்டுமல்லிப் பூவை பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, இந்தப் பூவை பயிரிடுகிற போது, அறுவடை செய்கின்றபோது இது அலர்ஜியாகவோ காலில் மற்றும் கையில் வெடிப்பு வருவதாகவோத் தெரியவில்லை. ஏனென்று சொன்னால் இந்தப் பயிரை பயிரிட முனைகின்றபொழுதே நான் அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன். அவர்களிடத்திலேயிருந்து விதைகளை வாங்கி சென்னையிலே போட்டிருந்தேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு நிறைய பூத்திருந்தது. இங்கே கூட அந்தப் பூவை பறித்தபோது எந்த விதமான அலர்ஜியும இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *472*, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

472—

கறவை மாடுகள் வாங்க கடனுதவி வழங்குதல்

**21932*—திரு.தா. வேடியப்பன்:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கறவை மாடு வாங்க கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை கறவை மாடுகள் வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் கடன் உதவி வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு 1994-95-ல் 89 நபர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டது.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் கறவை மாடுகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசிலே சிறப்பான முறையிலே வழங்கி வந்தாலும், இந்த ஆண்டும் தொடர்ந்து வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அத்தோடு போளூரிலே வேளாண்மை செய்யும் மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், போளூர் வட்டத்தில் அதிகமாக பால் உற்பத்தி இருப்பதாலும் கூடுதலாக இந்த மாடுகளை வழங்குவதற்கும், குறிப்பாக மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிகமாக கறவை மாடுகள் வழங்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்கள் அத்தனையும் நிறைவேற்றப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு தமிழ்நாட்டிலே எனது போளூர் வட்டத்திற்கு அதிகமான மாடுகள் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 473. திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

473—

தனியார் மருத்துவமனையில் அதிக கட்டணம் வசூலித்தல்

***35149**—திரு. ஏ.கே.சி.சுந்தரவேல்:*

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தனியார் மருத்துவமனைகளில் குளிர் சாதனம் பொருத்தப்பட்டு மிக அதிகமான கட்டணம்/வாடகை வசூலிக்கப்பட்டு வருவதை அரசு அறியுமா?